டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 3.09.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 064 - Madurai | Online Edition

# பிரதமரின் தன தானிய வேளாண் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் ஆய்வு

புது தில்லி, செப்.2

மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், நேற்று (01.09.26) புதுதில்லியில் உள்ள கிருஷி பவனில், தன்-தான்ய கிருஷி யோஜனா எனப்படும் பிரதமரின் தன தானிய வேளாண் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தார். அடையாளம் காணப்பட்ட 100 மாவட்டங்களில் இத்திட்டச் செயலாக் கத்தை விரைவுபடுத்துதல், ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், மாவட்ட அளவிலான செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றில் இந்த ஆய்வு கவனம் செலுத்தியது. ஆய்வின் போது, திட்டத்தின் முன்னேற்றம் குறித்து, அத்திட்டத்தின் தகவல் பலகை மூலம் அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

குறைந்த வேளாண் உற்பத்தித்திறன் கொண்டதாக அடையாளம் காணப்பட்ட 100 மாவட்டங்களில் வேளாண் வளர்ச்சியை விரைவு படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டம் ஆறு முக்கிய நோக்கங்களில் கவனம் செலுத்துகிறது : அவை,

வேளாண் உற்பத்தித்திறனை அதிகரித்தல், நிலையான வேளாண் நடைமுறைகளை ஊக்குவித்தல், அறுவடைக்குப் பிந்தைய சேமிப்புத் திறனை மேம்படுத்துதல், நீர்ப்பாசன உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், குறுகிய, நீண்ட கால வேளாண் கடனுக்கான அணுகலை அதிகரித்தல், நிர்வாகத்தையும் சேவை வழங்கலையும் மேம்படுத்துதல்.

ஒவ்வொரு மாவட்ட தன தானிய திட்டக் குழுவிலும் இரண்டு முற்போக்கு விவசாயிகளை நியமிப்பதன் மூலம் விவசாயிகளின் பங்கேற்பை வலுப்படுத்துவது குறித்தும் இந்த ஆய்வில் பரிசீலிக்கப் பட்டது.

# தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உலக தென்னை தின விழா



கோயம்புத்தூர், செப்.2

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியம் இணைந்து உலக தென்னை தினம் நேற்றைய தினம் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின் செயல் துணைவேந்தர் முனைவர் மு.இரவீந்திரன், தலைமையேற்று, தென்னையின் இரகங்கள் வறட்சி மேலாண்மை, நோய் மற்றும் பூச்சிக் கட்டுபாடு, ஊடுபயிர் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதல் போன்றவற்றில் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் செயல்பாடுகளை எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் இயக்குநர் இள அறவாழி, தென்னை வளர்ச்சி வாரியம், தென்னையின் வளர்ச்சியில் வாரியத்தின் பங்கினை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார் மேலும் இவ்விழாவில் பி.சித்தார்தன், கோவை தோட்டக்கலை துணை இயக்குநர், முன்னோடி விவசாயிகளான ரஞ்சித், ஓ.வி.ஆர்.சோமசுந்தரம், முனைவர் க.வெங்கடேசன், முதன்மையர் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் முனைவர் ஏ.சோமசுந்தரம், இயக்குநர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். முனைவர் வெ.இராஜஸ்ரீ. பேராசிரியர் மற்றும் தலைவர், வரவேற் புரை ஆற்றினார். இவ்விழாவில் தமிழகத்தின் பல்வேறு பகுதியி லிருந்து சுமார் 500 தென்னை விவசாயிகள் விஞ்ஞானிகள், மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர். தென்னையின் உற்பத்தி தொழில்நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தென்னையில் மதிப்பு கூட்டுதல் போன்ற தொழில் நுட்ப உரைகளை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வழங்கினார்கள். மேலும் இவ்விழாவில் தென்னை இரகங்கள், பல தரப்பட்ட தென்னை உள்ளூர் வகைகள், ஊடுபயிர்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகள், தென்னை நாற்றங்கால் போன்றவை கண்காட்சிப் படுத்தப்பட்டன.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை வாசனை மற்றும் மணமூட்டும் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் இணைந்து செய்தது. முடிவாக இணைப்பேராசிரியர் முனைவர் இரா.சித்ரா நன்றியுரையாற்றினார்.

# சொக்கனூரில் மண்வளம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை பயிற்சி



சேலம், செப்.2

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், சொக்கனூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மண் வளம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தலைமை தாங்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ் வரவேற்று, விவசாயிகள் விவசாயி அடையாள எண் பதிவு செய்வதன் அவசியம் குறித்து விளக்கினார்.

பயிற்சியாளர் பிரவீன், மண் பரிசோதனை அடிப்படையில் பயிர்களுக்கு உர மேலாண்மை செய்வது, பஞ்சகவ்யம், தசகவ்யம், ஜீவாமிர்தம் போன்ற இயற்கை இடுபொருட்களை தயாரித்து பயன் படுத்துவது, பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்வதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும், அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் நன்மைகள் குறித்தும் விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, மண் மாதிரி எடுக்கும் முறையை விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கமாக செய்து காண்பித்தார். உதவி வேளாண்மை அலுவலர் கணேசமூர்த்தி, வேளாண்மைத் துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் நுண்ணீர் பாசன மானியம் குறித்து விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல், அட்மா திட்டத்தின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**29. சோள சூப்**

**தேவையான பொருட்கள்**

சோளம் — 1 கப்

வெங்காயம் — 1

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

சோளத்தை வேக வைத்து அரைத்து வெண்ணெயில் வதக்கிய வெங்காயத்துடன் சேர்த்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய வல்லுநர் விதை உற்பத்தி திடலில் கண்காணிப்புக்குழு ஆய்வு




ஈரோடு, செப்.2

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொரு ஆண்டும் உயர் விளைச்சல் தரும் பயிர் இரகங்களைக் கண்டறிந்து வெளியிட்டு வருகின்றது. அவ்வாறு வெளியிடப்பட்ட உயர் விளைச்சல் இரகங்களின் கருவிதைகளைக் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் விதைப் பண்ணைகள் அமைத்து வல்லுநர் விதை உற்பத்தி செய்து மாநில அரசு விதைப் பண்ணைகளுக்கு விதைபெருக்கத்திற்காகவும் விவசாயிகளுக்கு சாகுபடிக்காகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அமைக்கப்படும் விதைப்பண்ணைகளை ஆய்வு செய்து வயல் ஆய்வு தரத்தினை துல்லியமாக கடைபிடித்து தரமான விதைகளை உற்பத்தி செய்வதை உறுதி செய்திடும் பொருட்டு வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு உள்ளது. இக்குழுவானது விதைப்பயிர் பூப்பருவம், அறுவடைப் பருவம் மற்றும் விதைக்குவியல் விதைசுத்தி ஆகிய நிலைகளில் ஆய்வு செய்து விதைத் தரத்தினை உறுதி செய்கின்றது.

இந்நிலையில் நடப்பு பருவத்தில் பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நெல் பயிரில் ஏடிடி 37 இரகம் , உளுந்து பயிரில் வம்பன்10,11 இரகங்கள்; பச்சைப்பயரில் கோ 9, நிலக்கடலை பயிரில் வி ஆர் ஐ 10ஆகிய இரகங்களில் வல்லுநர் நிலை விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு விதைப்பண்ணை பயிர் பூப்பருவம் மற்றும் அறுவடைப் பருவத்தில் உள்ளது. இவ்விதைப்பண்ணைகளை பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மணிவண்ணன், உதவி பேராசிரியர்கள் சாந்தி, உத்தரராசு, ஈரோடு விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் மா.சத்தியராஜ், விதைச்சான்று அலுவலர்கள் ஜெயக்குமார் மற்றும் மாரிமுத்து ஆகியோர் அடங்கிய வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு ஆய்வு செய்தது.

ஆய்வின்போது விதைப்பயிரில் பிற இரக கலவன்கள், பயிர் விலகு தூரம், குறித்தறிவிக்கப்பட்ட நோய்கள் போன்றவற்றையும் ஆய்வு செய்தனர். மேலும் தரமான வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்திட தேவையான அனைத்து நடைமுறைகளையும் கடைபிடிக்க களப்பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தற்போது வறண்ட காலநிலை நிலவுவதால், வறட்சி தாங்கக்கூடிய பயிர் இரகங்கள் மற்றும் குறுகிய கால இரகங்களை தேர்வு செய்து அதனை சொட்டு நீர்ப் பாசன வசதி கொண்ட நிலங்களில் விதைப்பண்ணை அமைத் திட அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் இயற்கை முறையில் விளை பொருட்களை உற்பத்தி செய்து விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்தும் வழிமுறைகளும் தெரிவிக்கப்பட்டது.

# நத்தத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் மா விவசாயிகள் குழுவிற்கான பயிற்சி

திண்டுக்கல், செப்.2



திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் மா விவசாயிகள் குழுவிற்கான பயிற்சி திங்கட்கிழமை (செப். 1ல்) வழங்கப்பட்டது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் மா விவசாயிகள் குழுவிற்கான பயிற்சி முகாம் நத்தத்தில் நடந்தது. 2026-27 ஆம் ஆண்டிற்கான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாம்பழ ஏற்றுமதிக்கான தர மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டதை தொடர்ந்து 50 பயனாளிகள் தேர்ந் தெடுக்கப்பட்டு அவற்றில் தலைவர், துணைத் தலைவர், பொருளாளர் தேர்வு செய்யப்பட்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட விவசாயக் குழுவிற்கான பயிற்சிக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் முகமது ஆஷிப் தலைமை தாங்கினார். துணை அலுவலர் ஜெகன்னாத் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் இக்குழுவின் செயல்பாடுகள் குறித்தும், அதற்கான நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் குறித்து விளக்கினர். இதில் தேர்வு செய்யப்பட்ட குழு நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தென்னை வேர்வாடல் நோயை கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – நோவோனெசிஸ் ஒப்பந்தம்




கோயம்புத்தூர், செப்.2

தென்னை வேர்வாடல் நோயைக் (RWD) கட்டுப்படுத்துவதற்கான உயிரியல் தீர்வுகளை உருவாக்கவும், மண் மற்றும் தென்னை மரங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் (TNAU), பெங்களூரைச் சேர்ந்த லிங்பி, டென்மார்க்கை தலைமையிடமாகக் கொண்ட நோவோனெசிஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.

ரூ.67 லட்சம் மதிப்பிலான, மூன்று ஆண்டுகளுக்கான இத்திட்டத்தில், புரோபயாட்டிக் பாக்டீரியா கூட்டமைப்புகள் மற்றும் ஊட்டச்சத்து அடிப்படையிலான உயிரியல் தீர்வுகளை உருவாக்கி, அவற்றின் செயல்திறனை ஆய்வு செய்வதுடன், வயல்வெளி பரிசோதனைகள் மற்றும் விவசாயிகளின் பங்கேற்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது.

தமிழகத்தின் முக்கிய தென்னை சாகுபடி பகுதிகளான பொள்ளாச்சி, கோவை, தேனி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை வேர்வாடல் நோய் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் 30 முதல் 60 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 60 சதவீதம் வரை மகசூல் இழப்பு இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண் வளம், தென்னை மரங்களின் வீரியம் மற்றும் காய் மகசூலை மேம்படுத்தும் வகையில் பயனுள்ள புரோபயாட்டிக் நுண்ணுயிர்த் தொகுப்புகள் மற்றும் பொருத்தமான ஊட்டச்சத்துகள் ஆய்வு செய்யப்பட உள்ளன. மேலும், விவசாயிகளின் திறன் மேம்பாட்டுக்கான அறிவு மையம், பயிற்சிகள், வயல்வெளி நிகழ்ச்சிகள்

மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் விரிவாக்கத் துறைகள் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகளுடன் (FPOs) இணைந்து நடத்தப்பட உள்ளன.

நோவோனெசிஸ் நிறுவனத்தின் சார்பில் மண்டலத் தலைவர் மற்றும் மூத்த துணைத் தலைவர் (MEIA) கிருஷ்ண மோகன் புவாடா, பங்குதாரர் உறவுகளுக்கான வெளிப்புற இயக்குநர் கிருஷ்ணன் ஜி.எஸ்., மண்டல உத்தி மற்றும் வர்த்தக மேம்பாட்டுத் தலைவர் (MEIA) டாக்டர் அனிஷா கோயல், வேளாண்மையியல் மூத்த ஆலோசகர் (MEA) டாக்டர் மோசஸ் கிறிஸ்டோபர் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பதிவாளரும் பொறுப்பு துணைவேந்தருமான டாக்டர் எம்.ரவீந்திரன், CPMB&B இயக்குநர் டாக்டர் என்.செந்தில், உயிரித் தகவலியல் துறை பேராசிரியரும் தலைவருமான டாக்டர் எல்.அருள், முதன்மை ஆய்வாளர் டாக்டர் எஸ்.நக்கீரன், தாவர உயிரித் தொழில்நுட்பத் துறை இணை முதன்மை ஆய்வாளர் டாக்டர் பி.ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டாண்மையின் மூலம் ஆய்வு முடிவுகளை நடைமுறைக்கு ஏற்ற, விரிவுபடுத்தக்கூடிய தொழில்நுட்பங்களாக மாற்றி, தமிழகத்தில் நிலையான தென்னை உற்பத்திக்கு உதவும் தீர்வுகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



புதுக்கோட்டை, செப்.2

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் கிராமத்தில், வேளாண்மைத் துறையுடன் இணைந்து விவசாயிகள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில், இப்கோ கள அலுவலர் கார்த்திகேயன், மண்ணின் ஆரோக்கியம் மற்றும் மண்ணில் உள்ள கரிம கார்பனின் முக்கியத்துவம், உயிர் உரங்கள் மற்றும் பயோ டிகம்போசரின் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும், நானோ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பிமற்றும் சாகரிகா ஆகியவற்றின் நன்மைகள் குறித்தும் எடுத்துரைத்தார். அத்துடன், இப்கோவின் சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டம் மற்றும் மண்ணின் வளத்தைப் பாதுகாத்து, நிலையான வேளாண்மையை மேம்படுத்தும் வகையில் இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக தென்னை நாள் விழா 2026




புதுக்கோட்டை, செப்.2

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம், புது தில்லியின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் வம்பன், வேளாண்மை அறிவியல் நிலையப் பயிற்சி வளாகத்தில் தென்னையின் முக்கியத் துவத்தை உணர்த்துவதற்காகவும், தென்னை விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்காகவும், தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை பிரபலப் படுத்துவதற்காகவும், நவீன தென்னை சாகுபடி தொழில் நுட்பங்களை பரப்புவதற்காகவும் உலக தென்னை நாள் விழா 02.09.26 புதன் கிழமை அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த விழாவினை வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன், துவக்கி வைத்து, சிறப்புரை ஆற்றி மேலும் தமிழ்நாட்டில் தென்னை சாகுபடியின் முக்கியத்துவத்தையும் மற்றும் தென்னையில் காணப்படக்கூடிய ரகங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் க.பி.செந்தில் குமார் (உழவியல்) தென்னையில் தாய் கன்றுகளை எவ்வாறு தேர்வு செய்வது பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் ஜெ.பாலமுருகன் (மண்ணியல்) தென்னையில் நீர், ஒருங்கினைந்த உர மற்றும் மண்வள மேலாண்மை குறித்து தொழில்நுட்ப உரை ஆற்றினார். அடுத்ததாக முனைவர் இரா.ராம் ஜெகதீஷ் (பயிர் நோயியல்) தென்னையில் தோன்றக் கூடிய பூச்சி மற்றும் நோய் நிர்வாக முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். முனைவர் வ.பா.இராகவேந்திரன் (கால்நடை அறிவியல்) தென்னையில் லாபகரமான தீவிர ஊடுபயிர் சாகுபடி

செய்வது எப்படி என்பதை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா (உணவு மற்றும் ஊட்டச்சத்தியல்) தென்னையில் மதிப்புக்கூட்டப் பட்ட பொருட்கள் தயாரித்தல் செய்வது பற்றி விரிவுரையாற்றி அவற்றை எவ்வாறு தயாரிக்கலாம் என்றும் விரிவாக எடுத்துரைத்தார். இவ்விழாவில் 50-க்கும் மேலான விவசாயிகள் கலந்து கொண்டு இந்த விழாவை சிறப்பித்தனர். இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை வம்பன் வேளாண்மை அறிவியல் நிலை யத்தின் திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) ப.கருப்பசாமி மற்றும் திட்ட உதவியாளர் (கணினி) தே.அமுல்ராஜ் செய்திருந்தனர்.



# TNAU AGRI CART (அக்ரி கார்ட்) - பற்றி தெரியுமா?

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் (TNAU AGRI CART) விவசாயிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்ட ஒரு ஆன்லைன் இணையதளமாகும். அமேசான், பிளிப் கார்ட் ஆகியவற்றில் தேவையான பொருட்களை வாங்குவது போல விவசாய சம்மந்தப்பட்ட பொருட்களை இதன் வாயிலாக வாங்கிடலாம்.

**இதனுடைய சிறப்பு அம்சங்கள்?**

1) விவசாய உள்ளீடுகள் – தரமான விதைகள், உரங்கள் மற்றும் உழவியல் சார்ந்த பொருட்கள் ஆன்லைனில் (ON-LINE) கிடைக்கின்றன.

**2) வீட்டுக்கே டெலிவரி (HOME DELIVERY)**

ஆர்டர் செய்த பொருட்கள் 7 வேலை நாட்களுக்குள் விவசாயிகளின் இல்லத்திற்கே டெலிவரி.

**3) எளிமையான பயன்பாடு**

விவசாயிகள் எங்கு இருந்தாலும், எப்போது தேவைபட்ட இடுபொருட்களை இந்த செயலி (TNAU AGRI CART) வாயிலாக ஆர்டர் செய்யலாம்.

**எப்படி ஆர்டர் செய்வது தெரியுமா?**

1) தங்களுடைய மொபைல் போனில் குகூல் (GOOGLE) தேடு தளத்தில் TNAU AGRI CART என டைப் செய்து தேடவும்.

2) தேவையான பொருட்களை கண்டறிந்து அதனை தேர்வு செய்யவும்.

3) அந்த இடுபொருளின் வலது புறத்தில் BUY NOW என காண்பிக்கும்.

அதற்கு அருகில் இடுபொருளின் எண்ணிக்கையை அதிகரிக்க OPTIONS கொடுக்கப்பட்டுள்ளது.

4) BUY NOW என்ற பட்டனை தேர்வு செய்தால் தொலைபேசி எண் கேட்கும். தொலைபேசி எண்ணை பதிவு செய்த பிறகு (OTP) NUMBER கேட்கும்.

5) இதை டைப் செய்தால் (LOGIN) செய்ய ஏதுவாக பெயரைக் கேட்கும்.

அதை பதிவு செய்த பிறகு இடுபொருட்களின் எண்ணிக்கை கேட்கும்.

6) பின்னர் பெயர், தொலைபேசி மற்றும் முழு முகவரி கேட்கும் ( G.S.T NO ) என கேட்கும். ஆனால் இது கட்டாயம் கிடையாது.


7) பிறகு சேவ் அண்ட் டெலிவரி (SAVE AND DELIVERY) என்றும் கேட்கும். இதை தேர்வு செய்த பிறகு பில் (BILL) போட முகவரி கேட்கும்.

8) இதை பூர்த்தி செய்த பிறகு ATM CARD / GPAY / PHONE PE / PAY TM / வழியாக பணத்தை செலுத்த வேண்டும்.

9) டெலிவரிக்கான கட்டணத்தை செலுத்தி நாம் பொருட்களை எளிதாக பெற்று பயன்படுத்திடலாம்.

என்ன பயறு ஓண்டர் வாங்கிட ஆர்டர் போட்டாச்சா என்ன...

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பண்ணை இயந்திரமயமாக்குதல் குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, செப்.2

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் நல்லாம்பட்டி வருவாய் கிராமத்தில் பண்ணை இயந்திரங்களை பிரபலப்படுத்துதல் குறித்த பயிற்சி பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சா.கலைச்செல்வி, தலைமையில் நடைபெற்றது. வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்கள் பற்றியும், நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார்.

இப்பயிற்சியில் உதவி செயற்பொறியாளர் நவின், பேசுகையில் வேளாண் பொறியியல் துறையில் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல், பண்ணை குட்டைகள் அமைத்தல், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல், வேளாண் விளை பொருட்கள் மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் மற்றும் அவற்றை பயன்படுத்தும் முறை முக்கியத்துவம் பற்றியும் தெளிவாக விளக்கிக் கூறினார். மேலும் வேளாண் அறிவியல் நிலையம் பிரேமலதா, பேசுகையில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர். இயற்கை விவசாயி கணேசன், பேசுகையில் இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் மேலும் அங்கக வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள் பயிர் சுழற்சி மற்றும் அங்கக இடுபொருள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்தகரைசல், ஜீவாமிர்தம் மற்றும் பூச்சி மேலாண்மை, களை மேலாண்மை பற்றிய விவரங்களையும் அவற்றை இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் முறை குத்த விவரங்களை எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத்திறன் குறித்து பயிற்சி



திருவள்ளூர், செப்.2

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டாரம் வேளாண்மைத் துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் மூலம் திருத்தணி வட்டாரத்தில் உள்ள பெரியகடம்பூர் கிராமத்தைச் சார்ந்த 40 விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறன் பற்றி பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி திருத்தணி வேளாண்மை உதவி இயக்குனர் பெ.பிரேம் தலைமையில் நடைபெற்றது. துணை வேளாண்மை அலுவலர் பெரியசாமி, பயிற்சியில் கலந்து கொண்டு அனை வரையும் வரவேற்று பேசினார், வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத் துரைத்தார். பயிற்சிக்கு வெங்கடேசன், வேளாண்மை அறிவியல் நிலையம், திரூர், கலந்து கொண்டு சமச்சீர் உரம் இடுதலின் அவசியம் மற்றும் உர பயன்பாட்டுத்திறனை மேம்படுத்துவதற் கான தொழில்நுட்ப முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

உரங்களின் சமச்சீர் பயன்பாடு என்பது பயிரின் தேவைக் கேற்ப தழைச்சத்து (N), மணிச்சத்து (P), சாம்பல்சத்து (K) மற்றும் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை, மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், சரியான அளவு மற்றும் சரியான நேரத்தில் பயன்படுத்துவதாகும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## உரங்களின் சமச்சீர் பயன்பாட்டின் முக்கியத்துவம்

### மண் பரிசோதனை

● பயிரிடுவதற்கு முன் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.
● மண்ணில் ஏற்கனவே உள்ள சத்துக்களின் அளவை அறிந்து, அதற்கேற்ப உரமிட வேண்டும்.

### NPK உரங்களை சரியான விகிதத்தில் பயன்படுத்துதல்

● தழைச்சத்து (N) இலை மற்றும் தண்டு வளர்ச்சிக்கு உதவுகிறது.
● மணிச்சத்து (P) வேர் வளர்ச்சி மற்றும் பூக்கும் திறனை அதிகரிக்கிறது.
● சாம்பல்சத்து (K) பயிரின் வலிமை, நோய் எதிர்ப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துகிறது.

எனவே ஒரு சத்தை மட்டும் அதிகமாகப் பயன்படுத்தாமல், பயிரின் தேவைக்கேற்ப மூன்றையும் சமநிலையாக வழங்க வேண்டும்.

### சரியான அளவு உரமிடுதல்

● அதிகப்படியான உரம் பயன்படுத்துவது மண் வளத்தையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கலாம்.
● குறைவான உரம் பயன்படுத்தினால் பயிர் வளர்ச்சி மற்றும் மகசூல் குறையலாம்.

எனவே பரிந்துரைக்கப்பட்ட அளவை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### சரியான நேரத்தில் உரமிடுதல்

● பயிரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப உரங்களைப் பிரித்து இடுவது சிறந்தது.
● குறிப்பாக தழைச்சத்து உரங்களை ஒரே முறையில் அதிகமாக இடாமல், தேவைக்கேற்ப பிரித்து இடலாம்.

### இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல்

● தொழு உரம், பசுந்தாள் உரம், மண்புழு உரம், கம்போஸ்ட் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணில் கரிமப் பொருளின் அளவை அதிகரிக்கலாம்.
● இது மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனையும் நுண்ணுயிர் செயல்பாட்டையும் மேம்படுத்துகிறது.

**உயிர் உரங்களின் பயன்பாடு**

● அசோஸ்பைரில்லம், அசோட்டோபாக்டர், பாஸ்போ பாக்டீரியா போன்ற உயிர் உரங்களை பயிருக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம்.

● இவை சத்துக்கள் பயிருக்கு கிடைப்பதை மேம்படுத்த உதவுகின்றன.

**நுண்ணூட்டச் சத்துக்கள்**

● துத்தநாகம், இரும்பு, போரான், மாங்கனீசு போன்ற நுண்ணூட்டச் சத்துக்களும் பயிருக்கு தேவையான அளவில் வழங்கப்பட வேண்டும்.

● குறைபாடு இருந்தால் மண் பரிசோதனை மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் பயன்படுத்த வேண்டும்.

**சமச்சீர் உரமிடுதலின் நன்மைகள்**

● பயிரின் ஆரோக்கியமான வளர்ச்சி ஏற்படும்.
● மகசூலும் விளைபொருளின் தரமும் அதிகரிக்கும்.
● உரச் செலவு குறையும்.
● மண் வளம் நீண்ட காலத்திற்கு பாதுகாக்கப்படும்.
● அதிகப்படியான உரப் பயன்பாடு தவிர்க்கப்படும்.
● சுற்றுச்சூழல் மாசுபாடு குறையும்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க உதவும் என்று விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் மா. செல்வப்ரியா விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்தும், நம்ம வயல் செயலி மூலம் பயிர் கணக்கெடுப்பு எடுப்பது பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு கூறினார். இப்பயிற்சிக்கு உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அ.அருளானந்தம் மற்றும் சே.சரவணன் ஆகியோர் தேவை யான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## நுண்கீரைகள் வளர்ப்பு மற்றும் அதன் ஆரோக்கிய பயன்கள் பற்றிய கட்டண பயிற்சி

மதுரை, செப்.2

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வரும் செப்டம்பர் 9-ம் தேதி அன்று நுண்கீரைகள் (Microgreens) வளர்ப்பு மற்றும் அதன் ஆரோக்கிய பயன்கள் பற்றிய ஒரு நாள் கட்டண பயிற்சி நடக்க உள்ளது.

பயிற்சியில் நுண்கீரைகள் வளர்க்கும் தொழில்நுட்பங்கள், விதைகளை நேர்த்தி செய்யும் முறைகள், நுண்கீரைகளை பாதுகாப்பாக பேக்கிங் செய்யும் முறைகள் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய தொழில்நுட்ப உரைகள் வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியின் பயிற்சி கட்டணம் ரூபாய் 590/- ஆகும். மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் பங்கு பெற விருப்ப முள்ளவர்கள், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை, அலைபேசி எண் : 99652 88760, 93449 36897 தொடர்பு கொள்ளலாம்.



# விவசாயிகளுக்கு மதிப்புக்கூட்டுதல் மையம் நிறுவ மானியம் : வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

திருச்சி, செப்.2

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பயறு வகை பயிர்களை பாதுகாக்க விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டுதல் மையம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 6000 எக்டர் பரப்பளவில் விவசாயிகள் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். உளுந்து பயிரின் உற்பத்தியை பெருக்கி பயறு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்கில் வேளாண்மைத்துறை மூலம் பயறு வகைகளில் தன்னிறைவுக் கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025-26-ஆம் ஆண்டு முதல் 2030-31-ஆம் ஆண்டு வரை செயல் படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் பயறு வகை மதிப்புக் கூட்டுதல் மையம் அமைத்திட இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது. இதனால் பயறு வகை பயிர்களின் மதிப்புக் கூட்டி அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் குறைத்து விவசாயிகள் வருமானம் உயர்வதுடன் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். இந்த திட்டத்தின் கீழ் பயறு உற்பத்தியை மேம் படுத்தி மதிப்புக் கூட்டுதல் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற்று பயனடையலாம். அந்த வகையில் அறுவடை செய்த பின் இயந்திரங்கள் அமைக்க திட்ட செலவில் 33 சதவீதம் வரை நிதியுதவி அல்லது அதிகபட்சமாக 25 இலட்சம் வரை மானியம் இவற்றுள் எது குறைவோ அதற்கான மானியம் வழங்கப்படுகிறது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், விவசாயிகள் தொகுப்பு கட்டமைப்புகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள், தொழில் முனைவோர் மற்றும் தனி நபர்கள் இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதி உடையவர்கள்.

எனவே, ஆர்வமுள்ள நபர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம்) ஆகியோரை அணுகி பயன் பெறுமாறு என திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# பயறுவகை பயிர்களில் தொகுப்பு முறை முதல் நிலை செயல் விளக்கத் திட்டம்



மதுரை, செப்.2

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டம், லாலாபுரம் கிராமத்தில் ‘பயறுவகை பயிர்களில் தொகுப்பு முறை முதல் நிலை செயல் விளக்கத் திட்டத்தின் கீழ் ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் கு.ஆனந்த், தலைமை வகித்து தொழில்நுட்ப உரையாற்றினார்.

பயறு வகை பயிர்களில் சாகுபடி குறித்து தொழில்நுட்ப உரை அளித்தார். விவசாயி களுக்கு பயிர் வகை பயிர்களில் விதை அமிர்தம் கொண்டு விதை நேர்த்தி செய்து செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. பயறுவகை பயிர்களில் உளுந்து, துவரை மற்றும் பாசிப்பயிறு விதைகளில் அதிக மகசூலை பெறுவதற்காக TNAU பயறு ஒண்டர் தெளிப்பு முறைகள் பற்றியும், அதனால் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு இடுப் பொருளாக பாசிப்பயறு கோ 9 விதையும், விதை அமிர்தமும் மற்றும் பயறு ஒண்டர் வழங்கப்பட்டது. தொழில்நுட்ப உதவி யாளர் மு.மூவேந்திரன், மாரிமுத்து ஆகியோர் முகாமை ஒருங்கிணைந்தனர்.



# விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஆய்வுக்குழு சோதனை

# ரூ. 81.42 லட்சம் விதைகள் விற்க தடை

விருதுநகர், செப்.2

விதை ஆய்வு சிறப்புக் குழுவினரின் அதிரடி சோதனையில், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மவாட்டங்களில் ரூ.81.42 லட்சம் மதிப்பிலான விதைகள் விற்க தடை விதிக்கப்பட்டது.


கோயம்புத்தூர் விதை ஆய்வாளர்கள் தலைமையிலான சிறப்பு குழுவினர் விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை விரிவாக்க மையங்கள், அரசு விதை சுத்தகரிப்பு நிலையம், அரசு விதைப்பண்ணை மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் என 38 இடங்கில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர், ஆய்வின் போது, விதை ஆய்வாளர் மனோரஞ்சிதம், திருவில்லிபுத்தூர் விதை ஆய்வாளர் ச.அபர்ணா மற்றும் அருப்புக்கோட்டை விதை ஆய்வாளர் ப.பிரியங்கா உடனிருந்தனர்,

ஆய்வின் போது, விதை விற்பனை நிலையங்களில் இருப்பில் இருந்த விதை குவியல்களில் இருந்து மானாவாரி பருத்தி மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்களில் இருந்து விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டது. இந்த விதை மாதிரிகளின் தரத்தை உறுதி செய்ய விருதுநகர் மற்றும் தூத்துக்குடியில் செயல்படும் விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது,

அப்போது, தனியார் விதை விற்பனை நிலையங்களில் 46 விதைக் குவியல்களில் உரிய ஆவணங்கள் பராமரிக்கப் படாததால் ரூபாய் 81.42 இலட்சத்தில் 22 ஆயிரத்து 380 கிலோ விதைகள் விற்பனை தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் விதைச்சட்ட நடைமுறைகளை மீறி செயல்படுபவர்கள் மீது கடுமையான, நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தென்னை வயல் வெளிப்பள்ளி



தஞ்சாவூர், செப்.2

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டாரம், சோழன்மாளிகை கிராமத்தில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் விவசாயிகளுக்கான தென்னை வயல் வெளிப்பள்ளியின் துவக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் துவக்க உரையாற்றிய M.அமுதா, பயிர் பாதுகாப்பு அலுவலர், பயிற்சியை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

இந்த பயிற்சியானது வாரம் ஒரு முறை தென்னையில் உள்ள அனைத்து விதமான பயிர் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகள், கன்றுநேர்த்தி, மண் பரிசோதனை, உர நிர்வாகம், நீர் நிர்வாகம், அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பம் அனைத்தும் விரிவாக விவாதிக்கப்படும் என்று கூறினார்.

அடுத்து உரையாற்றிய ராஜேஸ்வரி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய செயல்பாடுகள், வயல் வெளிப்பள்ளியின் நோக்கம் மற்றும் பூச்சிக்கொல்லியினால் ஏற்படும் தீமைகள் பற்றி விரிவாக விளக்கமளித்தார்.

துவக்க விழாவின் நிறைவில் நிஷிந்தா, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் பயிற்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். பயிற்சியில் 35 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான தொழில்நுட்ப ஏற்பாடுகளை மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியை சேர்ந்த அபின், தொழில்நுட்ப அலுவலர் செய்திருந்தார்.

# பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பண்ணைப்பள்ளி பயிற்சி



கிருஷ்ணகிரி, செப்.2

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் பண்ணைப்பள்ளி ராமசந்திரம் கிராமத்தில் வேப்பனப்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி, தொடங்கி பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகள் குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது, வேளாண்மை துணை இயக்குநர் (ஓய்வு) மனோகரன், பயறு வகை பயிறுக்கு விதை நேர்த்தி செய்தல், இயற்கை பூச்சி விரட்டி முறைகள், பஞ்சாவ்யா, ஐந்திலை கரைசல், ஜுவாமிர்தம், மண்புழு உரம் தயாரித்தல் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விளக்கி கூறினார். இந்த பயிற்சியின் போது, கிருஷ்ணகிரி, நடமாடும் மண் பரிசோதனை நிலையம், வேளாண்மை அலுவலர், ஆரோ சோனியா பிரட் மற்றும் காருண்யா, கலந்து கொண்டு மண் மாதிரி சேகரிக்கும் முறை மற்றும் அவற்றின் நன்மைகள், மண் ஆய்வு பரிந்துரையின படி உரம் இடுதல், மண்ணில் உள்ள கரிமச்சத்து அளவுகளை அறிந்து அதற்கேற்ப கரிம உரங்களையும்இ உயிர் உரங்களையும் பயன்படுத்தி, மண்வளத்தை பராமரிக்க முடிகிறது என்று விளக்கி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன், உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்,

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மற்றும் சொட்டுநீர் பாசன திட்டத்தின் நன்மைகள் பற்றி தெளிவாக கூறினார். இந்த பயிற்சியில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக் கொண்ட விவசாயிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி, உதவி வேளாண்மை அலுவலர் பிரியதர்ஷினி, வேப்பனப்பள்ளி உதவி வேளாண்மை அலுவலர் நேரு, அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா மற்றும் பிரியா ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தனர்.

